# பொதுமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்- உலக தண்ணீர் தின கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சத்யராஜ் வேண்டுகோள்



**தென்காசி மார்ச்.30:**
உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசை ஊராட்சி மன்றம் சார்பில் தலைவர் சத்யராஜ் தலைமையில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

அப்போது ஊராட்சி மன்ற தலைவர் பொதுமக்களிடம் பேசும் போது பொது மக்கள் சிக்கனமாக தண்ணீரை பயன்படுத்த வேண்டும் மழை நீரை சேமிக்க வேண்டும் மேலும் பொதுமக்கள் ஒவ்வொருவரும் வீட்டிற்கு குறைந்தபட்சம் ஒரு மரம் ஆவது வளர்க்க வேண்டும் அப்போதுதான் நீரை சேமிக்க முடியும் தேவைக்கு மட்டுமே தண்ணீரை பயன்படுத்த வேண்டும் வீணாக்கக் கூடாது என வேண்டுகோள் விடுத்தார். இக்கூட்டத்தில் துணைத் தலைவர் சண்முகசுந்தரம், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பன்னீர்செல்வம், ஊராட்சி செயலர் சமுத்திரம், மற்றும் வார்டு கவுன்சிலர்கள் அம்புலி, கண்ணன், இசக்கிதேவி, கலைச்செல்வி, சங்கரம்மாள், மைதீன்பாத்து, சந்திரா, சண்முகசுந்தரம், சரவணன், மல்லிகா, கருப்பசாமி, சுப்பையா ஊராட்சி பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்

# தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கட்டணமில்லா பயண அட்டைகளை வரும் ஜூன் மாதம் வரை பயன்படுத்தலாம் : கலெக்டர் தகவல்

**தென்காசி மார்ச்.30:**
தென்காசி மாவட்டத்தில் பள்ளி மற்றும் கல்லூரி,பணி மற்றும் சிகிச்சைக்கு செல்லும் இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை பெற்றுள்ள மாற்றுத் திறனாளிகள் பயண சலுகை அட்டையினை 30-06-2025 வரை பயன்படுத்தி கொள்ளலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்;, தகவல்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டணமில்லா பயண அட்டைகளை தமிழ்நாடுமின் ஆளுமை முகமை இணைய தளம் வாயிலாக இனிவரும் நாட்களில் வழங்க வேண்டியுள்ளதால், தென்காசி மாவட்டத்தினை சார்ந்த மாற்றுத் திறனாளிகள் தங்கள் ஏற்கனவே பெற்றுள்ள பயணசலுகை அட்டையினை 30-06-2025 வரை பயன்படுத்தி கட்டணமில்லா பயணச்சலுவையினை பெற்றுக ;கொள்ளலாம்.மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பயண சலுகை பயணத்தின் பொழுது இடையூறுகள் ஏற்படின் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக தொலைபேசி எண்ணில் (04633-212915) தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்;, தெரிவித்துள்ளார்;.



**உலக தண்ணீர் தினத்தையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலெக்டர் ஆர்.அழகு மீனா கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார்.**



**திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தெற்கு பஜாரில் இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நடைபெற்ற கிராமிய கலைஞர்களின் கலை சங்கமம் நிகழ்ச்சியினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தவுல் வாசித்து துவக்கி வைத்தார். உடன் கலெக்டர் மருத்துவர் இரா.சுகுமார் உள்ளார்.**

# அனைத்து அமைப்புகளும் கொடிக்கம்பங்களை அகற்றிட வேண்டும் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் அறிவுறுத்தல்

**தென்காசி மார்ச்.30**
தென்காசி மாவட்டத்தில் அரசியல் கட்சிகள், சமூகம், மதம், சங்கம் போன்ற அனைத்து அமைப்புகளும் தங்களது அமைப்புகள் சார்பாக வைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பங்களை அகற்றிடுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது கலெக்டர்ஏ.கே.க ம ல் கி ஷோர் தெரிவித்துள்ளார்.

**அறிவிப்பு**

சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை உத்தரவு படி தமிழகம் முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், உள்ளாட்சிஅமைப்புகள் மற்றும் இதர அரசுதுறைகளுக்குச் சொந்தமான பொதுஇடங்கள் மற்றும் நிலங்களில் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை 12 வாரங்களுக்குள் அனைத்து அரசியல்கட்சிகள், சமூகம், மதம், சங்கம் போன்ற அனைத்து அமைப்புகளும் அகற்ற உத்திரவிடப் பட்டுள்ளது

தென்காசி மாவட்டத்தில் அரசியல் கட்சிகள், சமூகம், மதம், சங்கம் போன்ற அனைத்து அமைப்புகளும் தங்களது அமைப்புகள் சார்பாக வைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பங்களை 20.04.2025- ஆம் தேதிக்குள் தாங்களாகவே முன்வந்து அகற்றிடுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. அரசியல்கட்சிகள், சமூகம், மதம், சங்கம் போன்ற அனைத்து அமைப்புகளும் தங்களது கொடிக்கம்பங்களை மேற்குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அகற்றாத பட்சத்தில் சம்மந்தப்பட்ட துறையின் மூலம், கொடிக்கம்பங்களை அகற்றிவிட்டு, கொடிக்கம்பங்களை அகற்றுவதற்கான செலவினத் தொகையினை, சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளிடமிருந்து வசூலிக்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# செங்கோட்டையில் சாலை மற்றும் வாறுகால் அமைக்க எம்எல்ஏ கிருஷ்ணமுரளி ஆய்வு

செங்கோட்டை, மார்ச்,30 : தென்காசி வடக்கு மாவட்டம் செங்கோட்டை நகர்ப்பகுதியில் வார்டு எண் 21, 23, 24 மற்றும் 16 வது வார்டு பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினருமான செ கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பாவை நேரில் சந்தித்து வைத்த கோரிக்கையின் அடிப்படையில் அந்த பகுதிகளுக்கு நேரில் சென்று 16 வது வார்டு பகுதியில் சாலை அமைத்திடவும், 21,23, மற்றும் 24 வது



வார்டு பகுதிக்கு சென்று வாறுகால் அமைக்க வேண்டிய இடத்தில் உள்ள மக்களிடம் கலந்தாலோசித்து அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார், இந்நிகழ்வின் போது நகர செயலாளர் கணேசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

# விண்ணப்பித்த அனைவருக்கும் பட்டா வழங்கப்படும்: அமைச்சர் கீதாஜீவன் உறுதி

**தூத்துக்குடி. மார்ச்.30,**
தூத்துக்குடியில் பட்டா கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுக்கிணங்க முறைப்படுத்தி பட்டா வழங்கப்படும் அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

தூத்துக்குடி அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் கணினி பட்டா விண்ணப்பிக்கும் முகாம் நடைபெற்றது. திமுக வடக்கு மாவட்ட செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமை வகித்தார். கனிமொழி எம்.பி. பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கீதாஜீவன் பொது மக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டு பேசுகையில் "தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுக்கிணங்க தூத்துக்குடியில் முதற்கட்டமாக நடைபெற்ற மனுக்கள் பெறப்படும் நிகழ்ச்சியில் 3,624 பேர் மனு அளித்திருந்தனர். அதில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் ஸ்கேன் செய்யப்பட்டு வருவாய்துறையினர் சரி பார்த்து பட்டா வழங்கப்படுகிறது.

இதற்கு ஆட்சியர், ஒரு குழு அமைத்துள்ளார். அந்தக் குழுக்கள் முழுமையாக இந்த பணியை செய்து வருகின்றனர். இரண்டு கட்டமாக கணினி பட்டா இது வரை 282 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்ற அனைவருக்கும் முறையாக முறைப்படுத்தி ஆய்வுகள் மேற்கொண்டு வழங்கப்படும். இதற்கான முழு பங்களிப்பு கலெக்டரும் ஈடுபட்டு பணியாற்றுகிறார். எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கி இந்த வரலாற்று நிகழ்வுகளுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று பேசினார்.

விழாவில் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், கோட்டாட்சியர் பிரபு, மேயர் ஜெகன் பெரியசாமி, உதவி பொறியாளர் சரவணன், மாநக திமுக செயலாளர் ஆனந்தசேகரன், துணை செயலாளர் கீதா முருகேசன், கனகராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் அபிராமி நாதன், கவிதா தேவி, துணை அமைப்பாளர்கள் அருணா தேவி, பிரபு, நாகராஜன், மாநகர அணி அமைப்பாளர்கள் ஜீவன் ஜேக்கப், மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.1,963 கோடி கடன் வழங்க திட்டம் : கலெக்டர் இளம்பகவத் தகவல்

**தூத்துக்குடி. மார்ச்.30.**
தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் ரூ.1,963 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளதாக ஆட்சியர் இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்துக்கான 2025- 2026-ம் ஆண்டின் நபார்டு வங்கியின் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தலைமை தாங்கி, கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டு பேசினார். அப்போது, தமிழகத்தின் ஊரக வளர்ச்சி பணியில் முக்கிய பங்கு வகிக்கும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி) தூத்துக்குடி மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற வளம் சார்ந்த தகவல்களை சேகரித்து அதன் மூலம் 2025- 2026-ம் ஆண்டில் ரூ.20011.80 கோடி அளவுக்கு கடனாற்றல் உள்ளது என மதிப்பீடு செய்து உள்ளது. விவசாயத்தில் நீண்டகால கடன் அளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை இந்த திட்டம் விளக்குகிறது.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் 2025-2026ம் ஆண்டுக்கு, பயிர் கடன் ரூ.3591.97 கோடி, விவசாய முதலீட்டு கடன் ரூ.3181.89 கோடி, விவசாய கட்டமைப்பு கடன் ரூ.1135.18 கோடி விவசாய இதர கடன்கள் ரூ.1963.07 கோடி என விவசாயிகளுக்கு மொத்த கடன் மதிப்பீடு ரூ.9872.11 கோடியாகும். சிறு, குறு நடுத்தரத் தொழில் கடன் ரூ.6005.90 கோடி, ஏற்றுமதி, கல்வி மற்றும் வீட்டு வசதிக்கான கடன் ரூ.3001.45 கோடி, அடிப்படை கட்டுமான வசதி ரூ.215.24 கோடி, சுய உதவிக் குழுக்கான கடன் அளவு ரூ.917.10 கோடி என மொத்தம் ரூ.20011.80 கோடி அளவுக்கு கடனாற்றல் உள்ளதென மதிப்பீடு செய்து கடன் திட்ட அறிக்கை வெளியிடப் பட்டு உள்ளது.

இது போன்ற கடன் வசதிகள், விவசாயத்தில் அடிப்படை கட்டுமான வசதிகளை பெருக்கி, விவசாயத்தை ஒரு வளம் நிறைந்த தொழிலாக மாற்றிட உதவும். வேளாண்மையில் எந்திரமயமாக்கல், சொட்டு மற்றும் தெளிப்பு நீர் பாசன முறையை பயன்படுத்துதல், கால்நடை வளர்ப்பை விவசாயத்தின் ஒரு அங்கமாக செய்தல் போன்ற விவசாயிகளின் வருமானத்தை பெருக்க உதவிடும். வங்கிகள் இதுபோன்ற முதலீடுகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சுரேஷ் ராமலிங்கம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் துரைராஜ், தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் மல்லிகா, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) சுவர்ணலதா மற்றும் அனைத்து வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ரமலான் பெருநாளை முன்னிட்டு பித்ரா அரிசி வினியோகம்



**கடையநல்லூர். மார்ச் 30:**
கடையநல்லூர் காவா அறக்கட்டளை சார்பில் ரமலான் பெருநாளை முன்னிட்டு பித்ரா அரிசி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு ரகுமத்துல்லாஹ் தலைமை வகித்தார். அறக்கட்டளை நிர்வாகிகள் சம்சுதீன் , இஞ்சீனியர் ஹூசைன், யாக்கூப், சேக் உஸ்மான், அப்துல் மஜீத் ,சேக் உஸ்மான் முகம்மது குலாம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காவா ட்ரஸ்ட் செயலாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். மௌலா பிச்சை சாகிபு கிராத் ஓதினார்.

தென்காசி மாவட்டம் அரசு காஜி முகையதீன் அன்சாரி ரசாதி , கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான், தமிழ் நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் சங்க கௌரவத் தலைவர், சகோ ஓ .எம் .ஏ .காதர், காவல் உதவி ஆய்வாளர் ரவி, இன்ஜினியர் முகமது யூசுப், ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று ஏழை எளிய பயனாளிகளுக்குகாவா ட்ரஸ்ட் பித்ரா அரிசி 4 கிலோ வீதம் 2200 நபர்களுக்கு வழங்கப்பட்டது. மற்றும் 13 நபர்களுக்கு மருத்துவ உதவி 2 பேருக்கு கல்வி / 7 நபர்களுக்கு பொருளாதார உதவிகளும் மொத்தம் 22 பேருக்கு 53 ஆயிரம் ரூபாய் பகிர்ந்து அளிக்கப்பட்டு வழங்கப்பட்டது .

டாக்டர் ஹம்ஷா முகையதீன் கலந்தரி உனைஸ், செலஸ்டியல் ஹவுஸ் முகையதீன்,குரஷீத் அப்பாஸ்,முகம்மது ஆரிப் கம்புளி ஜப்பார் ஆகியோர்களும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிர்வாகிகள் ,அகமது மைதீன் , முகம்மது அலி,குலாம் உட்பட பலர் கலந்து கொண்டனர் இறுதியில் பெருந்தரகன் அப்துல் மாலிக் நன்றியுரையாற்றினார்.

# தென்காசி மாவட்டத்தில் தாட்கோ மூலம் தொழில் துவங்க வாய்ப்பு : கலெக்டர் தகவல்

**தென்காசி மார்ச்.30**
தென்காசி மாவட்டஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைசார்பில்தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை சார்ந்த தொழில் முனைவோருக்கு ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட தாட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில் துவங்க வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார்


தமிழ்நாடு அரசு ஈரோடு மாவட்டம் ஈங்கூர் மற்றும் திருப்பூர் மாவட்டம் முதலிபாளையம் தொழிற்பேட்டைகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு தொழிற்கூடங்களை குத்தகை மற்றும் வாடகை முறையில் வழங்க திட்டமிட்டுள்ளது.ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் 2024-25- ஆம் ஆண்டுசட்டபேரவை புதிய அறிவிப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் இரண்டு தொழிற்பேட்டைகளிலும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி புனரமைக்கப்படும் என அறிவித்தார் . அதனடிப்படையில் தற்போது முதலிபாளையம் தொழிற் பேட்டையில் அடிப்படை புனரமைப்புப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மற்றும் ஈங்கூர் தொழிற்பேட்டையிலும் புனரமைப்புப்பணிகள் தொடங்கப்பட்டு 3 மாத காலத்தில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இத்திட்டத்தில் குறு, சிறு மற்றும் பெரு தொழில் முனைவோரை கருத்தில் கொண்டு அவர்கள் பயன்பெறும் வகையில் வாடகை மற்றும் குத்தகை முறையில் காலிமனையாகவோ, மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கூடங்களாகவோ, ஒற்றைமாடி/பலமாடி தொழிற்கூடங்களாவோ அமைத்து அவர்களின் தேவைக்கேற்ப குறுகிய/நீண்டகால குத்தகை அல்லது வாடகை முறையில் வழங்கஅரசு தற்போது முன் வந்துள்ளது.

இத்திட்டத்தில் பயன் பெற விண்ணபத்துடன் விரிவான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது. தமிழ்நாட்டில்அனைத்து பகுதிகளிலிருந்தும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்கள் தாங்கள் தொழில் செய்வதற்கு மேற்கண்ட ஏதேனும் முறையில் தொழிற்கூடங்களை பெற விண்ணப்பிக்கும் முன்பாக தள பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விருப்பமுள்ளவர்கள் வருகின்ற 04.04.2025 அன்று காலை 10 மணியளவில் ஈங்கூர் தொழிற்பேட்டையில் தள பார்வையிடலாம்.இதில் பங்கு பெற விருப்பமுள்ள தொழில் முனைவோர்கள் https://forms.gle/fZPDgyWUToAAUobt7 என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

# கோவில்பட்டி கோவிலில் பங்குனி அமாவாசை பூஜை



**கோவில்பட்டி மார்ச் 30**
கோவில்பட்டி கதிரேசன் ரோட்டில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் பங்குனி அமாவாசை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைப்பெற்றது. இதனையொட்டி வெற்றி விநாயகர், முத்துமாரியம்மன், சந்தன கருப்பசாமிக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை நடைப்பெற்றது. பூஜைகளை சுப்ரமணிய சுவாமி செய்தார். இதில் சுற்று வட்டார மக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை கோவில் தலைவர் தங்கவேல் செயலார் மாரிச்சாமி பொருளாளர் லட்சுமனன் செய்தனர்.

# கோவில்பட்டியில் முன்னாள் சபாநாயகர் பி.எச்.பாண்டியன் பிறந்தநாள் விழா



**கோவில்பட்டி மார்ச் 30**
தமிழக முன்னாள் சபாநாயகர் டாக்டர். பி.. எச். பாண்டியன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவில்பட்டி ராஜீவ் நகர் 6 வது தெருவின் தென்கடைசி பகுதியில் உள்ள நீடிய வாழ்வு ஆதரவற்ற முதியோர் இல்லத்தில்உள்ள அனைத்து முதியவர்களுக்கும் கோவில்பட்டி முன்னாள் அரசு வழக்கறிஞர் வீ. செல்வின் ராஜ்குமார் சார்பில் அறுசுவை விருந்து கொடுக்கப்பட்டது.கோவில்பட்டி நோட்டரி வழக்கறிஞர் ராஜேஷ் கண்ணன் , வழக்கறிஞர். குமார் , பொறியாளர் சுரேஷ் , முன்னாள் பிஎஸ்என்எல். அதிகாரி பார்த்திபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்தொடர்ந்துஆசீர்வாத ஜெபம் செய்யப்பட்டது. இதில் ஏராளமான முதியவர்கள் பொதுமக்கள் குருமார்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் பெருநாள் தின அன்பளிப்பு நிகழ்ச்சி



**தென்காசி மார்ச்.30 :**
தென்காசி மதினா நகரில், நெல்லை ஷிபா மருத்துவமனை மற்றும் சமூக நல்லிணக்க கூட்டமைப்பு சார்பில் பெருநாள் தினத்தை முன்னிட்டு பித்ரா அரிசி மற்றும் புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சமூக நல்லிணக்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் கட்டி அப்துல் காதர் தலைமை வகித்தார்.நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில விவசாய அணி செயலாளருமான முகம்மது அலி வரவேற்றார். தென்காசி மீரான் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் அப்துல் அஜீஸ் அன்பளிப்புகளை வழங்கினார்.விடுதலை சிறுத்தைகள் கட்சி மண்டல துணைச் செயலாளர் சித்திக், நகர்மன்ற உறுப்பினர் நாகூர் மீரான், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கான்,யூசுப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் அரிசி, புத்தாடை உள்ளிட்ட பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது

# திருக்குற்றாலநாதசுவாமி கோவில் சித்திரை விசு திருவிழா



**தென்காசி மார்ச்.30:**
தென்காசி மாவட்டம், திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோவிலில் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டு கால்கோள் விழா நிகழ்ச்சி அறங்காவலர் குழு தலைவர் சக்தி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செயல் அலுவலர் ஜான்சிராணி, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜ், ராமலட்சுமி, ஸ்ரீதர் மற்றும் கோயில் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செங்கோட்டை ஏஜி தொடக்கப்பள்ளி ஆண்டு விழா



**செங்கோட்டை. மார்ச்.30-**
செங்கோட்டை ஏஜி தொடக்கப் பள்ளி ஆண்டுவிழா நடைபெற்றது. விழாவிற்கு செங்கோட்டை நகர்மன்ற உறுப்பினர் இசக்கியம்மாள் தலைமை வகித்தார். ஏஜி மெட்டிக் பள்ளி முதல்வர் ரேவதி முன்னிலை வகித்தனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் சுந்தரி வரவேற்றார் ஆசிரியர் பிரபாவதி ஆண்டறிக்கை வாசித்தார். இதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. மறுவேட போட்டிகள், குழு நடன போட்டி, சிறப்பு பட்டிமன்ற போட்டிகள், ஆங்கில உரையாடல் நிகழ்ச்சி , விளையாட்டு போட்டிகள், போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. இதில் ஒன்றாம் வகுப்பு பயிலும் மாணவன் கிஷோர் பள்ளியில் சிறந்த மாணவனுக்கான பரிசினை கடந்த இரு வருடங்களாக தொடர்ந்து பெற்று வருகிறான்.

